# கனம்.ரபி. அருமைநாயகம் சட்டாம்பிள்ளை ஐயா அவர்கள்

“சகோதரர்களொருமித்துச்
சஞ்சரிப்பதோ எத்தனை....” (கீர்த்தனை 223)

என்ற கீர்த்தனைப் பாடலை எப்பொழுதும் பாடிக்கொண்டே இருக்கலாம். கேட்டுக் கொண்டே இருக்கலாம். சங்கீதத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்த கீர்த்தனையை எழுதியவர்தான் அருமை நாயகம் சட்டாம்பிள்ளை ஐயா அவர்கள்.

சட்டம்பிள்ளை ஐயா அவர்கள் கி.பி.1823 அக்டோபர் 24ம் தேதியில் வேதநாயகம் நாடார், தங்கம் அம்மாள் ஆகியோர்களின் மைந்தராக பிரகாசபுரத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் அருமைநாயகம் ஆகும். ஏசுவடியான்நாயகம், ஜாண் நாயகம் என்ற இரு சகோதரர்களும், ஏழு சகோதரிகளும் உண்டு. இவரது பெற்றோர் சிறந்த செல்வந்தர்களாவர்.

பிரகாசபுரத்தில் தொடக்கக்கல்வியும், மெஞ்ஞானபுரத்தில் இடைநிலைக் கல்வியும் கற்றார். ஆங்கிலத்திலும், தமிழிலும் சிறந்த புலமை பெற்றிருந்ததோடு, கிறிஸ்தவ வேத அறிவிலும் தேவ பக்தியிலும் சிறந்து விளங்கினார். 1848-ல் உபதேசியார் தேர்வு எழுதி உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றார். சுதேச கிறிஸ்தவர்களில் இவரே அதிகக் கல்வி கற்றவராவார். அஞ்சா நெஞ்சம் கொண்டவர். 18 பாஷைகள் பயின்ற பஞ்சவர்ணக்கிளி என அழைப்பர். எனவே கேமரா என்ற கிறிஸ்தவச் சமயப் பரப்பாளர் இவரை நாசரேத்துப் பள்ளியில் ஆசிரியராகவும் பணியமர்த்தினர். மாணவத் தலைவராக இருந்தமையாலும், ஆசிரியப் பணி ஆற்றியமையாலும் அக்கால வழக்கபடி சட்டாம்பிள்ளை என்று மறுவியது. நாசரேத்திருச்சபை மன்றம் இவரைக் கிறிஸ்தவப் போதகப் பணிக்குத் தெரிந்தெடுத்து சாயர்புரம் போப் இறையியற் கல்லூரியில் படிக்க அனுப்பியது. அக்கல்லூரியில் வடமொழி, இலத்தீன், கிரேக்கம் முதலிய மொழிகளையும், கணிதம், தத்துவம், வரலாறு முதலிய பாடங்களையும் கற்றார். கி.பி.1851ல் சென்னைக்குச் சென்றார். அங்கு ஆறு ஆண்டுகள் தங்கி, பல்வேறு மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். அப்போது யூத அறிஞர் ஒருவரின் நட்பைப் பெற்று, அவர் மூலம் யூத சமயக் கொள்கைகளை நன்கு அறிந்து அதினால் கவரப்பட்டார்.